வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சகல இனங்களுக்குமிடையில் பரஸ்பர உறவை உருவாக்குதலும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் ;

(ஆ) பொருளாதார வசதிகள் குன்றியதால் கல்வி நடவடிக்கைகளை கைவிட்ட மாணவர்களுக்கு முன்னிலைப் பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலைகள், இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் மூன்றாம் நிலை தொழில்நுட்டபம் போன்றவற்றுக்கான கல்வி வசதிகளை ஏற்படுத்தல் ;

(இ) பரம்பரைக் கலாசாரங்களைப் பாதுகாத்தலும் அக்கலைஞர்களைப் பாதுகாத்தலும் அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தலும் ;

(ஈ) இளைஞர் யுவதிகளின் தலைமைத்துவத்தையும், ஆளுமையையும் முன்னேற்றும் பொருட்டு அவர்களின் இயலுமையை உச்ச அளவில் வளர்த்துக் கொள்ள பயிற்சியளித்தல் ;

(உ) இளைஞர்களின் உழைப்பு, அவர்களின் சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி சமூகத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தலும் அதற்குரிய வசதியளித்தலும் ;

(ஊ) குறைந்த வசதியுள்ள மற்றும் வசதியற்ற கிராமங்களின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருக்கு அவசியமான வசதிகளை வழங்குதல், அதனூடாக இயலுமை மற்றும் திறன்களை கண்டறிந்து தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் வளர்த்துக் கொள்ள அவசியமான நிதிகளையும் தொழில்நுட்டப வசதிகளையும் வழங்கல் ;

(எ) சுற்றாடல் முகாமைத்துவ முறையை அமைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் ;

(ஏ) விவசாயப் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதற்காக நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலும் பொருளாதார முகாமை பற்றிய அறிவை வழங்கவும் நடவடிக்கை எடுத்தலும் ;

(ஐ) கிராமியக் கடன்களை கட்டுப்படுத்துவதற்காக சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கவும், அவசியமான கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காக அவசிய கடன் நிறுவனங்களை நிறுவவும் அதன்மூலம் மக்களுக்கு சேவையாற்றலும் ;

(ஒ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகள் (பாரிய தொழிற்சாலைகளின் உதவியோடு) அபிவிருத்தி செய்ய முயலுதலும் ; அத்துடன்

(ஓ) குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த குடும்பப் பெண்களுக்குரிய வேலைத் திட்டங்களை உருவாக்கல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், பிரதித் தவிசாளர் நிறைவேற்றுப் பணிப்பாளர், செயலாளர், பணிப்பாளர் (நிதி) மற்றும் மேலும் பதினொரு பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் தாபக உறுப்பினரான கௌரவ அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவர்கள் பணிப்பாளர்கள் சபையின் ஆயுட்காலத் தவிசாளராகவும் அவரது ஒரே புதல்வரான தஹம் தாரக்க பல்லேவத்த அவர்கள் பிரதித் தவிசாளராதலும் வேண்டுமென்பதுடன், தவிசாளரின் பதவி வெற்றிடத்திற்கு பிரதித் தவிசாளர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவரது குடும்ப அங்கத்தினர் ஒருவர் பிரதித் தவிசாளராக வருதலும் வேண்டும்.

